# திரு குர்ஆன் கூறும் வானியலும் வான் சிறப்பும்

முனைவர் மு. ரா. மஜிதா பர்வின்

# Astronomy and The Blessing of Rain in the Quran

Dr M R Majitha Burvin

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எ. பி. சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு

Assistant Profssor, Department of Tamil, A.P.C.Mahalaxmi College for Women, Thoothukudi, Tamil Nadu, Email: mburvin@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குர்ஆனின் வசனத்தை உண்மையாக்கும் விதமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர், திருக்குறள் என்னும் 'உலகப் பொதுமறை' நூலில் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் "நீரின்றி யமையாது உலகு" என்று கூறியுள்ளார். உயிரினங்களுக்குத் தண்ணீர் மிகவும் முக்கியமானது என்பது மட்டுமன்று; தண்ணீர் இல்லாவிட்டால் இந்தப் பூமியில் உயிரினங்கள் தோன்றி இருக்க முடியாது. ஒவ்வொரு உயிரினமும் நீரால் படைக்கப்பட்டுள்ளது என்பதைக் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

**தேடு சொற்கள்**

திருக்குறள், திருக்குர்ஆன், ஐம்பெரும் பூதங்கள், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், திருமந்திரம், ஔவையார்

**Abstract**

Thiruvalluvar, who lived two thousand years ago to make the verse of Thirukural come true, said in the chapter titled "The world is without water" in the book 'Ulaka Budho Gya' called Thirukkural. Not only is water vital to living things; Without water, life on earth could not exist. The Quran makes it clear that every living thing is made of water.

**Keywords:** Thirukkural, Holy Quran, five giants, earth, water, fire, air, sky, magic, Auvaiyar

## முன்னுரை

உலகில் உள்ள தொன்மையான மனித இனங்களில் ஒன்றான தமிழினத்தார் வானியல் ஆராய்ச்சியில் நுட்பமான புலமை பெற்றிருந்தனர். சங்கத்தமிழர் ஐம்பெரும் பூதங்களின் தோற்றங்களை வெளிப்படுத்தும்போது பரந்து விரிந்த வானிலிருந்து காற்றும் காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் தோன்றியுள்ள அறிவியல் உண்மையை இவ்வுலகிற்கு எடுத்துரைத்தனர்.

"விசும்பில் ஊழி ஊழூழ் செல்லக்
கருவளர் வானத்து இசையிற் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பணியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று
உண்முறை வள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுயர்பு ஈண்டு அவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத்து ஊழியும்" (பரி.2:4-9)

"மண்திணிந்த நிலனும்,
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்,
வளிதலைஇய தீயும்
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை"
(புறநானூறு-2:1-6)

இப்பாடலடிகள் முறையாகத் தோன்றும் ஊழிக்காலங்களை வெளிப்படுத்துகின்றன. அறிவியலின் துணையின்றி அரையங்குல வாழ்வினைக் கூட நகர்த்த முடியாத சூழல் இன்று நிலவுகின்றது. ஆனால் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த திருவள்ளுவர் திருக்குறளில் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தை அமைத்துப் பாடியுள்ளமை

வியப்பளிக்கிறது.

**வான்மழை**

"இறைவனே! உங்களுக்காகப் பூமியை விரிப்பாகவும் வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்தினின்றும் மழை பொழியச்செய்து; அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்" (திருக்குர்ஆன் -2.22) என்று அல்லாஹ், திருக்குர்ஆனில் கூறியிருக்கிறார்.

திருக்குர்ஆனின் வசனத்தை உண்மையாக்கும் விதமாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர், திருக்குறள் என்னும் உலகப் பொதுமறை நூலில் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் "நீரின்றியமையாது உலகு" என்று கூறியுள்ளார். வானை இடமாகக் கொண்டு நீர்த்துளிகள் மழையாகப் பொழிவதால் வான்சிறப்பு எனப்பெற்றது. வான்சிறப்பு என்று கூறினாலும் வானின் பயனாக இருக்கின்ற தண்ணீர் என்று பொருள் கொள்ள வேண்டும். தண்ணீரின்றி உலக இயக்கமில்லை; உயிர் வாழ்தல் இயலாது என்பதனைத் திருவள்ளுவர்,

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள்-20)
என்றார்.

வான்சிறப்பு அதிகாரம் மழையின் பெருமையைக் கூறுகிறது. மழையின் இன்றியமையாமை பற்றியும் மழை இன்மையால் நேரும் இன்னல்கள் பற்றியும் விளக்குகிறது. நிலவளமும் கடல்வளமும் மாந்தரின் மனவளமும் உலக ஒழுங்கமைவும் மழைநீரால்தான் அமையும் எனச் சொல்லும் அதிகாரம். காணமுடியாத கடவுளின் ஆற்றல் அவனது தன்னருளின் செயலாகிய மழையால் உணரப்படுகிறது என்பதால் கடவுள் வாழ்த்துக்கு அடுத்ததாக வான் சிறப்பு அதிகாரத்தை வைத்துள்ளனர் தொகுத்தோர்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் சோதனைகள் மூலம், 'மழைநீரே ஊற்றுநீருக்கும் ஆற்றுநீருக்கும் ஆதாரம்' எனப் பிரான்ஸ் நாட்டினர் கண்டறிந்து நிரூபித்தனர். 'அப்பொழுதுதான் நீரின்றி அமையாது உலகு எனின், அந்த நீரும் மழையின்றி அமையாது' என்பது நிரூபணமானது. இவ்வுண்மையினை 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர் தானெழுதிய திருக்குறளில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாவரங்கள் உள்பட எல்லா உயிரினங்களின் உடல் எடையிலும் முக்கால் பங்கிற்கும்மேல் நீர் இருக்கிறது. இந்தப் பூமியில் நீர் இல்லாத இடமே இல்லை. நம்மைச் சுற்றி உள்ள காற்றிலும் நம்மைச் சுமந்து நிற்கும் மண்ணிலும் நீர் உள்ளது. இந்தப் பூமி, 'நீர்க்கோளம்' என்று அழைக்கப்படுகிறது.

சூரிய வெப்பத்தால் கடல்நீர், ஆவியாக மாறி, காற்றில் கலந்து மேல் சென்று மேகங்களாகத் திரண்டு தூய்மையான மழைநீரைப் பொழிகிறது. அத்தோடு நின்று விடாமல் அந்த நீர் திரும்பவும் நீராவியாகி மழையையும் தண்ணீரையும் சுழற்சி முறையில் பெறுகிறோம். கரிக்கும் கடல் தந்த மேகத் துளிகளில், 'ஒரு துளி நீரிலும் உப்பில்லை' என்பது இயற்கை உலகிற்கு அளித்த வரப்பிரசாதம்.

**உயிர் காக்கும் அமிர்தம்**

"நிச்சயமாக! நாமே வறண்ட பூமியின் பக்கம் மழையின் மேகத்தை ஓட்டி (பொழியச் செய்து) அதன் மூலம் இவர்களும் இவர்களுடைய (ஆடு, மாடு, ஒட்டகம்) ஆகிய கால்நடைகளும் புசிக்கக் கூடிய பயிர்களையும் வெளிப்படுத்துகிறோம்" (திருக்குர்ஆன்ரூ32:27)
என்றும்
"எல்லா உயிரினங்களையும் அல்லாஹ் நீரில் இருந்து படைத்துள்ளான். அவற்றில் தன் வயிற்றின் மீது நடப்பவையும் உண்டு. அவற்றில் இரு கால்களால் நடப்பவையும் உண்டு. அவற்றில் நான்கு (கால்)களைக் கொண்டும் நடப்பவையும் உண்டு. தான் நாடியதை அல்லாஹ் படைக்கிறான்" (திருக்குர்ஆன் - 24:45) என்றும் உயிரினங்களுக்குத் தண்ணீர் மிகவும் முக்கியமானது என்பது மட்டுமல்ல; தண்ணீர் இல்லாவிட்டால் இந்தப் பூமியில் உயிரினங்கள் தோன்றி இருக்க முடியாது. ஒவ்வொரு உயிரினமும் நீரால் படைக்கப்பட்டுள்ளது என்பதைக் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.
உலகின் அனைத்துப் பொருள்களிலும் நீர் கலந்திருக்கிறது. நீர் கலவாத ரூ நீர் இல்லாத இடமில்லை. தண்ணீர் ஊடுருவி நிற்காத பொருளுமில்லை. மனித உடம்பில் 70 சதவிகிதம் தண்ணீர் இருக்கிறது. இந்தத் தண்ணீர் உயிர்நிலை வாழ்வுக்கு இன்றியமையாதது. அதுமட்டுமல்ல,

பூமண்டலத்தில் தட்பவெப்ப நிலைகளைப் பாதுகாக்கவும் தண்ணீர் பயன்படுகிறது. தண்ணீர் உணவாகவும் பிற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் சாதனமாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் அழுக்குகளை நீக்கித் தூய்மை செய்வதற்குத் தண்ணீரே பயன்படுகிறது. இந்த உலகம் தண்ணீர் மயமானது.

நிலம் பசுமை போர்த்தியதாக இருக்க வேண்டும். அங்ஙனம் நிலம் பசுமை தாங்கி விளங்குவது நிலத்திற்கும் உயிர்க் குலத்திற்கும் நல்லது. நிலமகள் பசுமைக்கோலம் பூண்டு விளங்க வேண்டுமானால் வான் நின்று மழை பொழிய வேண்டும். வான் நின்று மழை பொழியத் தவறி விடுமாயின் நிலத்தில் பசிய புல்லின் தலையைக் கூடக் காண்பது அரிது என்பதை,

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள்-16)

என்கிறது திருக்குறள். "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று இளங்கோவடிகள் வான்மழையை வாழ்த்தியுள்ளார். மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருதலால் மழை உலகத்தில் வாழும் உயிர்களுக்கு 'இறவா நிலை' அளிக்கும் அமிழ்தம் என்கின்றார்.

**மழையின் சிறப்பு**

"இறைவனே! உங்களுக்காகப் பூமியை விரிப்பாகவும் வானத்தை பாதுகாப்பான (விதானமான) முகடாகவும் அமைத்து, வானத்தினின்றும் மழை பொழியச்செய்து, அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்." (திருக்குர்ஆன் 2:22)

என்று இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான். திருமந்திரத்தில் வான் சிறப்பு எனும் பகுதியில் மழையின் சிறப்பினைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மாந்தர் வாழ்வில் ஒழுக்கம் நிலைபெறுவதற்கு உலகில் முதலில் வேண்டுவது மழை என்று குறிப்பிடுகின்றார் அவர்.

"அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோன்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே"
(திருமந்திரம்17:1)

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது. வற்றாத அமுத ஊற்றுப் போலச் சுரந்து பொழிகின்ற மழை நீரால் உயிர்களுக்குப் பலன் தருகின்ற பல மரங்கள் இயற்கையாக நிலத்தில் தோன்றி வளர்கின்றன. அவை உலக உயிர்கள் வாழ்வதற்கு வேண்டும் நிலையான உணவு முதலான பல நன்மைகளை அளிக்கின்றன. உலகில் உயிர்கள் வாழ உயிர்க்காற்றைக் கொடுத்துக் கரியமில காற்றினைப் போக்குகின்றன. உலகம் வெப்பம் அடைவதிலிருந்து நம்மைக் காக்கின்றன. உண்ணும் உணவாக நின்று உதவும் மழை, உண்ணும் உணவினைத் தரும் பல மரங்களும் பயிர்களும் வளர்வதற்குத் துணை நிற்கின்றன என்கிறார் திருமூலர்.

"நபியே! நீர் பார்க்கவில்லையா? அல்லாஹ் வானத்தில் இருந்து நீரை இறக்கி, அதனைப் பூமியில் ஊற்றுக்களாக ஓடச் செய்கிறான். அதன்பின் அதைக் கொண்டு வெவ்வேறு நிறங்களுடைய பயிர்களை வெளிப்படுத்துகிறான்" (திருக்குர்ஆன் - 39:21)

என்று சுமார் 1,400 ஆண்டுகளுக்கு முன்பே நிலத்தடி நீர் குறித்து குர்ஆன் கூறுகிறது. உயிரினங்கள் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தண்ணீரையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது அறிவியல் அறிவிக்கும் உண்மையாகும். உணவை உற்பத்தி செய்வதற்குத் தண்ணீர் உதவுகிறது. அதே நேரத்தில் அந்தத் தண்ணீர் உணவாகவும் இருக்கிறது. தண்ணீருக்கென்று தனியாக நிறம் கிடையாது; சுவை கிடையாது; மணம் கிடையாது. அது சேரும் பொருளுக்கேற்ப நிறத்தையும் சுவையையும் மணத்தையும் கொடுக்கும்.

**மழையின் வகைகள்**

ஆலி - மழைத்துளி, சோனை - விடா மழை, தூறல் - சிறிய மழை, சாரல் - மலையில் பட்டு விழும் மழை.

அடைமழை - ஐப்பசி மாதம் அடைமழை பெய்யும்; அடைச்ச கதவு திறக்காதபடி அடைமழை பெய்யும்.; கார்த்திகை மாதம் கனமழை பெய்யும் என்று பழமொழிகள் கூறுகின்றன. அந்தக் காலத்தில் நாள் முழுவதும் தொடர்ந்து மழைபெய்து கொண்டே இருந்திருக்கிறது. இப்படிப் பெய்யும் மழையைத்தான் அடைமழை அல்லது அடைத்த கதவு திறக்காத மழை என்று கூறுகின்றார்கள்.

கனமழை - அளவில் பெரிய துளிகள் உள்ள மழை. மாரி இல்லையேல் காரியம் இல்லை என்பது

பழமொழி. மாரி என்ற சொல் மழையைக் குறிக்கிறது. மழையையே தெய்வமாகப் பாவித்த ஆதிமனிதனின் அடையாளமாகத்தான் மாரி என்ற சொல் மழையையும் கடவுளையும் குறிக்கிறது.

ஆலங்கட்டி மழை - பனிக்கட்டிகள், மழையுடனோ அல்லது தனியாகவோ வானில் இருந்து விழுதல் பனி மழை அல்லது ஆலங்கட்டி மழை என்று அழைக்கப்படும். இவ்வாறு பனிமழை பெய்யக் காரணமாக இருப்பதற்கு "சூடோமோனாஸ் சிரஞ்சி" என்ற பனித்துகள்களை உண்டாக்கும் பாக்டீரியாவும் ஒரு காரணமாகும்.

பனிமழை - பனி மழையாகப் பொழிவது. இது பொதுவாக இமயமலை போன்ற சிகரங்களில் காணப்படும்.

ஆழிமழை - ஆழி என்றால் கடல். இது கடலில் பொழியும் இடைவிடாத மாமழையைக் குறிக்கும்.
துளி - மழையில்லாவிடில் துன்பமுறும் உலகத்தைப் போல் அருள் இல்லாத அரசினால் குடிமக்கள் தொல்லைப்படுவார்கள். திருவள்ளுவர் மழையைத் 'துளி' என்று அழைக்கின்றார். "துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன், அளியின்மை வாழும் உயிர்க்கு" என்கின்றது திருக்குறள்.

பெய் - நீதி வழுவாமல் ஓர் அரசு நாட்டில் இருக்குமேயானால் அது, காலத்தில் தவறாமல் பெய்யும் மழையினால் வளமான விளைச்சல் கிடைப்பதற்கு ஒப்பானதாகும். இதில் மழையைப் பெய் என்று கூறப்பட்டுள்ளது.

புயல் - புயல் என்பது காற்றுடன் வரும் மழையைக்குறிக்கும். இதை குறைவில்லாத மழை என்று வள்ளுவர் தருகின்றார். ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும் வாரி வளங்குன்றிக் கால் (குறள்). மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்.

இவ்வாறு மழைபொழியும் தன்மையையும் அளவையும் வைத்துப் பல பெயர்கள் வழங்கப்படுகிறது.

**நீரின் மகத்துவம்**

"வரப்புயர நீருயரும் – நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும் - குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோன் உயரும்"

என்ற ஔவையின் வரிகளுக்கு இணங்க மழைதான் அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்கின்றது. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது நீர். மனிதன் மட்டுமல்ல நீர் இல்லாமல் எந்த உயிரினமும் உயிர்வாழ முடியாது. இயற்கையின் அருட்பெருங் கொடைகளுள் ஒன்று மழைநீர். அதன் பயணமும் பயனும் நீண்டது என்பதனை, கே.ருக்மணியின் பின்வரும் கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

'துளியாய்த் தொடங்கும்
தூரலாய்த் தொடரும் ..
அருவியாய்க் கொட்டும்
ஆறுகளில் ஓடும் ......
குளத்தில் தேங்கும்
கிணற்றில் கிடக்கும்.....
கால்வாயில் கடக்கும்
கடலில் கலக்கும் ....
மழை நீரே ஞ் தண்ணீரே ...
மனிதர்களின் வாழ்வாதாரம் !.
மண்ணுயிர்களின் மூலாதாரம்.!
நீரின்றி அமையாது உலகம்
நினைவிலே கொள்வோம் !
இயற்கையின் கொடையாம் நீரினை
இனியாவது சேகரிப்போம்.
மரம் வளர்ப்போம்! வான்மழை காப்போம்!

..................................................................

**துணைநூற்பட்டியல்**


ஆசீர்வாதம் ஆர்.என்., (2005), பரிசுத்த வேதாகமம் - தமிழ் பைபிள் 1714, சுவிசேஷ ஊழிய நூல் நிலையம், வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை-7.

தஃப்சீர் இப்னு கஸீரின்(மொ.ஆ)., (2022), திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு, ரஹ்மத் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை.

புலியூர்க்கேசிகன் (உரை.ஆ.), (2015), பரிபாடல், சாரதா பதிப்பகம், இராயபேட்டை, சென்னை-14.

............, (2019), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், இராயபேட்டை, சென்னை-14.

மாணிக்கவாசகன் ஞா., (உரை.ஆ.), (2013), திருமூலர் திருமந்திரம் (மூலமும் விளக்க உரையும்), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-1.

வரதராசனார் மு., (உரை.ஆ.), (2014), திருக்குறள் தெளிவுரை, பாரி நிலையம், 90 பிராட்வே சென்னை-18.